**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.35/2026</u>**

**<u>நாள் : 11.06.2026</u>**

**எ.ம.சா.** 1 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரமேஷ் | மாவட்டம் | : | தருமபுரி |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.ஜெயராஜ் | வயது | : | 43 |
| ஊர் | : | தருமபுரி | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | தருமபுரி | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

நான் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணை கிடைக்கப்பெற்று அனுமதி கடிதத்துடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்கிறேன். விபத்து தேதி அன்று TN 29 BU 1220 என்ற வாகன ஓட்டுநர் லோகநாதனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து தேதி அன்று இந்த வாகனத்திற்கு தகுதி சான்று உள்ளதா என்றால் இல்லை. இந்த வாகனத்திற்கு அனுமதி சான்று உள்ளது. காப்பீடு உள்ளதா என்றால் உள்ளது.

**<u>மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

வேறு ஒரு முகவரியில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கலாம் என்றால் இருக்கலாம். லோகநாதன் த/பெ பசவராஜ், பழைய எண் 628, புதிய எண் 2.91, கேலாலவள்ளி கிராமம், அரூர் தாலுக்கா, தருமபுரி மாவட்டம் என்பவரின் ஓட்டுநர்

உரிமம் பெறப்பட்டுள்ளது. அந்த உரிமத்தை ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்கிறேன். ஆனால் அழைப்பாணையில் லோகநாதன் த/பெ பசவராஜ், ஒட்டப்பட்டி கிராமம், அரூர் தாலுக்கா, தருமபுரி மாவட்டம் என்று கேட்கப்பட்டுள்ளது. தகுதி சான்று எப்போது முடிவடைந்தது என்றால் 19.02.2020 முடிவடைந்து விட்டது. அதன் பிறகு 04.03.2021 ல் மீண்டும் தகுதி சான்று வழங்கப்பட்டது. தகுதி சான்று பெற கால அவகாசம் உள்ளதா என்றால் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.